328–

புதிய மின்விளக்கு கம்பங்கள் அமைக்க மின்துறைக்கு செலுத்தப்படும் தொகை.

***14234*–செல்வி எல். சுலோசனா:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) புதிய மின்விளக்கு கம்பம் அமைக்க நகராட்சியால் மின்துறைக்குச் செலுத்தப்படும் தொகை ரூ.2,500/– ஆக உயர்த்தப்பட்டதால், நகராட்சி தெருவிளக்குகள் அமைப்பது குறைவாக உள்ளது என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அத்தொகையைக் குறைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நகராட்சிகளில் தேவையான விளக்குகள் அவ்வப்போது பெறப்படும் விண்ணப்பங்களுக்குகேற்ப அமைக்கப்படுகிறது.

(ஆ) ஆகவே இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: செல்வி எல். சுலோசனா.

செல்வி எல். சுலோசனா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனது 34 மாத ஆட்சிக் காலத்தில் 43 நீதிமன்றங்களை ஏற்படுத்தி சாதனைப் படைத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மேட்டுப்பாளையம் தொகுதி மக்களின் கோரிக்கைகளை ஏற்று மேட்டுப்பாளையத்தில் முன்சீப் கோர்ட் அமைத்திட உத்தரவு வழங்கியதற்காக தொகுதி மக்களின் சார்பாகவும், மேட்டுப்பாளையம் வழக்கறிஞர்கள் சங்கத்தின் சார்பாகவும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்ததாக புதிய மின் விளக்குக் கம்பங்கள் அமைக்கும் திட்டத்தின்படி வைப்புத்தொகை ரூ. 2,500/– ஆக உயர்த்தப்படுவதற்கு முன்பு வைப்புத் தொகையாக எவ்வளவு நிர்ணயிக்கப்பட்டிருந்தது என்பதை மாண்புமிகு அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, தெருவிளக்குகள் அமைக்க மின்சார வாரியம் தெரு விளக்கு ஒன்றுக்கு விரிவாக்கப் பணிக்காக ரூ.300/–ம் மற்றும் ரூ.30/– மின் பயனீட்டுக் காப்புத் தொகை என வசூலிக்கப்படுகிறது. புதிதாக மின்அளவை பெறும் இடங்களில் மட்டும் ரூ. 200 மின்பயனீட்டு

காப்புத் தொகையாக வசூலிக்கப்படுகிறது. ஆகவே இந்தத் தொகைகளை வைத்துத்தான் நகராட்சிகளில் நாங்கள் மின் விளக்குகளை அமைக்கின்றோம் 1992–93-ல் ஏறத்தாழ 20 ஆயிரம் தெருவிளக்குகள்ள நாங்கள் அமைக்க வேண்டுமென்று டார்கெட் முடிவு செய்து பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே 2,500 என்பதற்கு மாண்புமிகு உறுப்பினர் எந்த அடிப்படையில் 2500 என்று கேட்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை. ஆகவே இப்படித்தான் நகராட்சிகளுக்கு மின்சார வாரியம் தெருவிளக்குகள் அமைப்பதற்கான தொகையை நிர்ணயம் செய்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செல்வி எல். சுலோசனா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி ஆணையர் அவர்கள் என்னிடம் முதலிலே ரூ. 165 இருந்ததாகவும் அதனை பலமடங்கு உயர்த்தியதால் தற்போது ரூ. 2000–க்கு மேலே கட்ட வேண்டியிருப்பதால் புதிதாக தெருவிளக்கு அமைப்பதற்கு நிதி வசதி இல்லை என்று சொன்னார்கள். ஆகவே குறைந்த வருவாய் உள்ள மேட்டுப்பாளையம் போன்ற நகராட்சிகள் புதிய தெருவிளக்குகள் அமைக்க வைப்புத் தொகை அதிகமாக உள்ள காரணத்தால் விளக்குகள் அமைக்க முடியாத நிலை உள்ளது. அதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். எனவே மக்கள் சேவையில் நாட்டம் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு வைப்புத் தொகையை அதிகரிப்பதற்கு முன்பு இருந்தது போன்ற அளவு இல்லாவிட்டாலும்கூட பலமடங்கு அதிகரிக்கப்பட்டிருப்பதை கொஞ்சம் குறைத்து அறிவிக்க ஆவண செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல பலமடங்கு உயர்ந்துள்ளதாக குறிப்புகள் என்னிடத்திலே இல்லை. என்னிடத்திலே இருக்கிற குறிப்புகளில் தெருவிளக்கு அமைக்க மின்சார வாரியம் விரிவாக்கப் பணிகளுக்கான ரூ.300/–ம் மற்றும் ரூ.30/–மின் பயனீட்டுக் காப்புத் தொகையாகவும் செலுத்தவேணடும் என்றுதான் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே பலமடங்கு என்பது எந்த அளவுக்கு இருக்கிறது என்று நகராட்சியினுடைய அதிகாரி தவறான தகவலைத் தந்திருக்கிறார் என்றே நான் நினைக்கின்றேன். மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையிலே இந்த அளவிலேதான் ஒரு தெருவிளக்கு அமைப்பதற்கு வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். பொதுவாக தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் ஏறத்தாழ 1,05,098 புதிய விளக்குகள் நம்முடைய ஆட்சி பொறுப்புக்கு வந்த பின்னாலே புதிய விளக்குகளை நாம் அமைந்திருக்கிறோம். அதுபோல் நகராட்சிகளும் 20 ஆயிரம்

விளக்குகளுக்கு டார்கட் முடிவு செய்து இலக்கு நிர்ணயித்து இப்போது பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எந்த ஆட்சிக் காலத்திலேயும் இல்லாத அளவுக்கு புதிதாக தெருவிளக்குகள் அமைக்கும் பணியை நம்முடைய தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் கொண்டு வந்தது நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே நகராட்சி அதிகாரிகள் தவறான தகவலை தந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இது சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் விவரங்களை எழுதி தருவாரேயானால் உடனடியாக மின்சாரத் துறை அதிகாரிகளையும் நகராட்சி அதிகாரிகளையும் ஒரு மீட்டிங் எடுக்கச் செய்து அதில் இருக்கின்ற குறைபாடுகளை நன்கு ஆலோசிக்கமுடியும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ம. தனபால்.

திரு. ம. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்திலே அமைக்கப்படும் தெருவிளக்குகள் மட்டும் அல்லாது, ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகராட்சிகள் ஆகியவற்றில் புதிய தெரு விளக்குகள் அமைக்க வேண்டுமென்றால் அதற்கு அட்வைஸ் பெற்று பணம் கட்டி வெகு நாட்களாக காத்திருக்கும் நிலைமை இருக்கிறது. இலக்கு என்று இருப்பதால் இதற்கு காலதாமதம் ஆகின்றது என்று நினைக்கின்றேன். எனவே அந்த வகையில் அல்லாமல் தெரு விளக்குகளை அமைத்துக் கொள்ள அனுமதி கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசைப் பொறுத்த மட்டிலே இலக்குகளை நாம் மிஞ்சி இருக்கிறோம் என்பதை யாரும் மறுக்கமுடியாது. விவசாயப் பம்ப் செட்டுகளுக்கு 40 ஆயிரம் என்று நிர்ணயித்து, 40,074 போட்டு இருக்கிறோம். அதே போல குடிசைகளுக்கு 40,000 என்று நிர்ணயித்து அந்த 40,000-ஐ செய்து முடித்திருக்கிறோம். அதேபோல எச்.டி.அண்ட் எல்.டி. இண்டஸ்ட்ரீஸ் சர்வீசுக்காக 20,000 என்று இலக்கு நிர்ணயித்து இருந்தோம். 20,274-க்கு கனெக்ஷன் கொடுத்திருக்கிறோம். எல்லாவற்றிலும் 100 சதவிகிதத்திற்கு மேலேயே நம்முடைய டார்ஜெட்-ஐ அச்சீவ் செய்திருக்கிறோம். அதே போல ஆதிதிராவிடர்கள் காலனிகளுக்காக 50 நிர்ணயித்தோம், 67 காலனிகளுக்குக் கொடுத்திருக்கிறோம். அதே போல ஸ்ட்ரீட் லைட்ஸ், 1,18,438 விளக்குகள் என்று நிர்ணயித்து 1,05,098 விளக்குகள் போட்டு

இருக்கிறோம். 90 சதவிகிதம் இலக்கை நாம் எட்டியிருக்கிறோம். ஆகவே இலக்கைப் பொறுத்தமட்டில் மின்சார வாரியம் அரசாங்கம் நிர்ணயித்த இலக்குகள், 100 சதவிகிதத்திற்கும் அதிகமாக இன்றைக்கு நம்முடைய இலக்கை எய்தி இருக்கிறார்கள். அதிலே குறைவு கிடையாது. இருக்கின்ற பிரச்சினை என்னவென்று சொன்னால், சில இடங்களில் அதிகாரிகள் ஊராட்சி ஒன்றியங்களிலேயும் சரி, நகராட்சிகளிலேயும் சரி. மின்விளக்குகளுக்கு பணம் கட்டிவிட்டேன் என்று சொல்கின்றார்கள். ஆனால் சில இடங்களிலே அப்படிப் பார்க்கிறபோது, அப்படிப் பணமே வரவில்லை என்று சொல்கின்றார்கள். இப்படிப்பட்ட அதிகாரிகள் இருக்கின்ற இடத்திலே இந்த பிரச்சினை, இரண்டு மூன்று இடங்களிலே வருகிறது. துறைகளிடம் இருக்கின்ற பிரச்சினை, ஊராட்சி ஒன்றியங்களிலே இருந்தாலும் அது நகராட்சியாக இருந்தாலும் அப்படி ஒரு சில இடத்திலேதான் வருகிறது. எல்லா இடங்களிலும் அப்படி அல்ல. அப்படி வருகின்ற இடங்களிலேதான் நான் ஏற்கெனவே சொன்னது போல, அதைக் கவனத்திற்குக் கொண்டுவந்தால். அந்த இரண்டு துறை அதிகாரிகளையும் அங்கே அழைத்து உடனடியாக தீர்வு செய்வதற்கு பேசி முடிவு செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப்பட்ட குறைபாடுகள் என்னுடைய கவனத்திற்கு வருகிறபோது இப்படிப்பட்ட குறைபாடுகள் நீக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி சுந்தராம்பாள்.

திருமதி செ. சுந்தராம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலைமை மோசமாக உள்ள நகரீயம், நகராட்சிகளில் பெருகியுள்ள மக்கள் தொகைக்கு ஏற்ப தெரு மின் விளக்கு அமைக்கும்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு மின் கம்பத்திற்கு ரூ.2,500 கேட்கவில்லை என்று கூறினார்கள். ஆனால் மின்சாரத் துறையைச் சேர்ந்த எஸ்.ஈ. அவர்கள் தெரு விளக்கு அமைப்பதற்கு ஒரு மின் கம்பத்திற்கு ரூ.2,500 செலுத்தவேண்டும் என்று கூறுகிறார்கள். இந்த 2,500 ரூபாய் செலுத்தவேண்டும் என்ற தொகையை முன்பு இருந்த வைப்புத் தொகையைப் போல ரூ.300 ஆகக் குறைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவனசெய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே அதுதான் சொல்லியிருக்கிறேன். குறிப்பிலே 300 ரூபாய், 30 ரூபாய் என்று தான் சொல்லியிருக்கிறார்கள். மின்சார வாரியத்தைப் பொறுத்தமட்டிலே இந்த விலைவாசி ஏறுகிறபோது பொருட்களின் விலை கூடுகின்றபோது அதற்கான

தொகையை சில இடங்களில் சில வருடங்களில் நாம் கூட்டிப்போடுகிறோம். ஆக அவர்கள் சொல்கிற அளவுக்கு ஒட்டுமொத்தமாக கூடி இருப்பதற்கு வாய்ப்பில்லை. ஏதோ தவறான தகவல் என்று நான் நினைக்கிறேன். இருந்தாலும் அதை உடனடியாக இன்றைக்கே நம்முடைய மின்சாரத் துறையினுடைய அதிகாரிகளிடம் ஆய்வு செய்து எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை நான் தெரிவித்து நடவடிக்கை எடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே தான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். இப்படிப்பட்ட இடங்களிலே இருக்கக்கூடிய குறைகளை நீங்கள் நேரடியாக எழுதித் தரவேண்டும். நான் அப்போதுதான் சம்பந்தபட்ட அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு அதற்கான நடவடிக்கைகளை எடுக்கமுடியும். இதுபோன்ற பிரச்சினைகள் இருந்தால் நீங்கள் எழுதி தாருங்கள். உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 329, திருமதி. ரெ. சியாமளா, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

329–

கோவில்பட்டி தொகுதியில் நிட்சேப நதியின் குறுக்கே பாலம் கட்டுதல்

***16293–திருமதி ரெ. சியாமளா:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) கோவில்பட்டி தொகுதியைச் சேர்ந்த திருவேங்கடத்திற்கு அருகில் நிட்சேப நதியின் குறுக்கே பாலம் ஒன்றைக் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது திட்டங்கள் ஏதும் இல்லை.

(ஆ) ஆகவே இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி ரெ. சியாமளா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியைச் சேர்ந்த திருவேங்கடத்திற்கு அருகில் நிட்சேப நதியின் குறுக்கே பாலம் கட்டினால் சிதம்பரனார் மாவட்டம், நெல்லை–கட்டபொம்மன் மாவட்டம், காமராஜர் மாவட்டம் ஆகிய மூன்று மாவட்டங்களை சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் பயன்பெறுவார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடுத்த